# பண்ணுருட்டி நகராட்சி

## *மன்ற கூட்ட அழைப்பிதழ்*

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம்** விசுவாவசு **வருடம்** தமிழ் மாதம் காத்திகை **16,** நாள் **02.12.2025** செவ்வாய்க்கிழமை **நேரம்** காலை **11.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

**<u>பண்ணுருட்டி நகராட்சி</u>**

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 02-12-2025-ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நகரமன்ற தலைவர்,**
**பண்ணுருட்டி நகராட்சி.**

1. தமிழ்நாடு அரசிதழ் அறிவிக்கை எண். 252, நாள். 02.06.2025 ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 37(1)(i.a) ல் மாற்று திறனாளர் மன்றம் உறுப்பினர் நியமனம் குறித்து திருத்தம் செய்யப்பட்டு அரசாணை நிலை எண். 119, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 26.06.2025 மற்றும் அரசாணை நிலை எண். 120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 26.06.2025 ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி நியமனம் குறித்து வரப்பெற்ற விண்ணப்பங்களில் மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண். 3020/2025/அ2, நாள். 30.10.2025 ல் மாவட்ட அளவிலான குழு திரு. ர.பானுகோபன் த/பெ. ரங்கபாஷ்யம் நெ.47 ஏ, மாரியம்மன்கோயில் தெரு, பண்ணுருட்டி அவர்களை பண்ணுருட்டி நகர மன்றத்திற்கான மாற்று திறனாளர் நகர் மன்ற உறுப்பினராக நியமனம் செய்திட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

   அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு நாள். 24.11.2025 ன் படி மேற்படி மாற்றுதிறனாளர் திரு. ர.பானுகோபன் த/பெ. ரங்கபாஷ்யம் அவர்கள் பண்ணுருட்டி நகரமன்றத்திற்கு மாற்று திறனாளர் நகரமன்ற உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டார் என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

   <u>அலுவலக குறிப்பு-</u>

   1.மன்றம் பதிவு செய்யலாம்

   கோ. எண். 1083/2025/சி1

2. **பண்ணுருட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் 2025-ம் மாத்திற்கு நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது**

   <u>அலுவலக குறிப்பு-</u>

   1.மன்றம் பதிவு செய்யலாம்

3. பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் தூய்மைபணியாளர் திருமதி.சிவகாமி க/பெ செல்வராஜ், என்பவர் பணிநீக்கம் உத்திரவினை எதிர்த்து கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மேற்கண்ட (E.P.10/2024) வழக்கு மீண்டும் துறந்து நகராட்சி சார்பாக வாதாட திரு. K.பரணிசந்தர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.12000/– சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.1566911/2025 திருமதி. சிவகாமி க/பெ செல்வராஜ்,__வழக்கிற்கு மேல்முறையிடுவதற்கும் வழக்கு தொடர்பாக ஆகும் செலவினம் ரூ.15000/– அரசு வழக்கறிஞர் திரு.C.செல்வராஜ் அவர்களின் உதவியாளர் திரு.சுஜித்க்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்:4180/2010/எச்1)

4. பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் திரு.S.ரமேஷ் த/பெ சேகர் மற்றும் R.குழந்தைவேல் த/பெ ராஜேந்திரன் 25.09.2015 தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் 25.12.2025 வழக்கை நிலுவையில் வைத்து பணியில் சேர்ந்தார். மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு எண். 514/2025 SC எண். 102/2025 நிரபராதி என 30.06.2025 தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் திரு. K.பரணிசந்தர் அவர்களிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டதில் SC எண். 102 நீதிமன்ற உத்திரவின்படி விடுவிக்கப்பட்டுள்ளார் என கருத்துரு வழங்கப்பட்டதற்கான கட்டணம். ரூ. 6000/– மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்:5203/2010/எச்1)

5. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவிற்கிணங்க தலைமை தேர்தல் அலுவலர்/அரசு செயலாளர் அவர்களின் அறிவுரைப்படி தமிழ்நாட்டில் 2026–ல் சட்டமன்ற பொது தேர்தல் வரவுள்ள நிலையில் 04.11.2025 முதல் அனைத்து தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடங்கப்பட உள்ளதால் 154 பண்ணுருட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் (பாகம் எண்.175 முதல் 225 வரை) (Enumaration Forms) வாக்குசாவடி நிலை அலுவலர்கள் மூலமாக (BLO's ) வீடு, வீடாக சென்று படிவங்கள் விநியோகிக்கப்பட்டு 04.12.2025 –க்குள் வாக்காளர்கள் மூலமாக பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை திரும்ப பெறப்பட்டு BLO APP–ல் Digitalization செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பணிகளை துரிதமாகவும், செவ்வனேவும் செய்திட உரிய ஆட்டோ விளம்பரங்கள் , டிஜிட்டல் பேனர்கள், மற்றும் நகராட்சி பணியாளர் மூலமாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் செய்ய ஆகும் செலவினம், மேலும் வாக்காளர் Enumaration Forms பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை உடனுக்குடன் Digitalization செய்திட ITK பணியாளர்கள் மற்றும் தனியார் தன்னார்வலர்கள் மூலம் தொடர்ந்து பதிவேற்றம் செய்திடவும் அவர்களுக்கு அவ்வப்போது தேநீர், பிஸ்கட், உணவு வழங்குதல், ஸ்டேஷ்னரி (பேனா, பென்சில் வெள்ளை தாள், ஜெராக்ஸ்) இணையதள சேவை மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்கள் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் தேர்தல் அவசர அவசியம் கருதி இதற்கான தோராய செலவினம் ரூ.5.00 (ஐந்து லட்சம்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:1972/2025/F1)

6. இந்நகராட்சியில் முன்னாள் மேலாளராக பணிபுரிந்த திரு. வி. சௌந்திரராஜன் அவர்களுக்கு பண்ணுருட்டி நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் குற்றச்சாட்டு பிறப்பிக்கப்பட்டு குற்றச்சாட்டின் பேரில் இறுதி உத்தரவாக தனியரது ஓய்வூதியத்தில் மாதம் ரூ. 3000/–ம் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்யவேண்டும் என அரசாணை (ப) எண்.136 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (ந.ப.2) துறை நாள். 28.04.2022–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை இரத்து செய்ய கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.WP.No. 33970/2025–ல் (1) கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை சென்னை (2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 ஆகியோரை பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண்.24698/2016/சி2 நாள்.14.10.2025–ல் மேற்கண்ட வழக்கிற்கு எதிர்வாதுரை மற்றும் தடையாணை நீக்க மனுவினை தயார் செய்து அரசு கூடுதல் வழக்கறிஞரின் ஒப்புதல் பெற்று உடன் அனுப்பிவைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு. G.இளமுருகு அவர்கள் மேற்கண்டவாறு எதிர்வாதுரை தயார் செய்து வழஙகியதற்கு பட்டியல் தொகை ரூ. 25000/– வழஙக கோரி 24.10.2025–ல் கடிதம் வழஙகியுள்ளார். எனவே மேற்கண்ட தொகையை அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

கோ.எண். 2063/2020/சி1

7. இந்நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகளில் பணிபுரிந்து வந்த பணியாளர்கள் (தொழிலாளர்கள்) பெயரில் வருங்கால வைப்பு நிதிக்கு ஒப்பந்ததாரர்களால் செலுத்தவேண்டிய தொகை ரூ. 18042382/– என தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம் மண்டல அலுவலகம் திருச்சி–8 அவர்களின் கடிதம் NO–CB/TRY/ENF/C2/81713/8F ORDER /1/2025–26 23.10.2025 –ன் நகராட்சி கணக்குகள் கனரா வங்கியில் பராமரிக்கப்பட்டு வருவதால் சம்மந்தப்பட்ட வங்கிக்கு தெரிவிப்பதவுடன் நகராட்சி வைப்பு தொகை கணக்கு மொத்தம் இந்த நிதிகளில் உள்ள தொகை கணக்குகள் முடக்கம் செய்யுமாறு தெறிவிக்கப்பட்டு தொடர்ந்து கனரா வங்கி மின்னஞ்சல் மூலமாக தொழிலாளர் வைப்பு நிதிக்கு செலுத்த வேண்டிய தொகைக்குரிய தொகையினை உரிய வரைவோலையாக அனுப்புமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதாக கனரா வங்கி மேலாளர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்திற்க்கு செலுத்த வேடிய தொகை சமந்தமான அலுவலகத்திற்கு தொடர்புகொண்டதில் தற்போது செலுத்த வேண்டிய தொகை ரூ.18042382/– அத்துடன் 100 சதவீதம் ரூ.18042382/–அத்துடன் வட்டி தொகை செலுத்த வேண்டும் என்பதால் இது சமந்தமாக உயர்நீதி மன்றத்தால் வழக்கு தடையானை பெற்று வந்தால்தான் விலக்கு பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது. நகராட்சி கணக்கை முடக்கம் செய்யப்பட்டுள்ளதை தவிர்கும் பெறுட்டு உயர்நீதிமன்றத்தில் தொழிலாளர் வைப்பு நிதி சமந்தமான பிரிவுகளில் சிறப்பு வாய்ந்த வழக்கறிஞர் திரு.சி, கார்த்திகேயன் அவர்கள் நகராட்சி சார்பில் வழக்கினை நடத்தும் மற்றும் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்க்கு சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஆடுவதற்க்கு வழக்கிற்கான செலவினை தொகை ரூ. 10,82,542/– வழங்குமாறு தெரிவித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கும் முடிவுக்கம் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்வதற்க்கும் மேலும் வட்டி தொகை மற்றும் தண்ட தொகை சென்றுவருவதிலிருந்து தவிர்க்கும் பொருட்டு உயர்நீதிமன்றங்களின் வழக்கு ஆடுவதற்காகன வழக்கறிஞர் செலவு தொகை அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

8. இந்நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 33 வார்டுகளில் உள்ள பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்கு கொசு புழு அழிக்கும் மருந்து மற்றும் முதிர் கொசுக்களை அழிக்கும் மருந்து கழிவுநீர் கால்வாய் மற்றும் தேங்கும் கழிவுநீரில் உற்பத்தியாகும் கொசு புழுக்களை அழிக்கும் மருந்து இந்நகராட்சியில் போதுமான அளவில் இருப்பில் இல்லாததால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி கீழ்கண்டவாறு மருந்துகளை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35599/2024/எச்2 நாள்.06.02.2025 உத்தரவின்படி கீழ்கண்ட மருந்துகளை தமிழ்நாடு அரசு மருந்து கட்டுப்பாட்டு மையம் அங்கிகரிக்கப்பட்ட விலையில் கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | மருந்துகளின் பெயர் | அரசு நிர்ணயித்த விலை | ஜி.எஸ்.டி 18% | 1லிட்டர் வ.எண்=1,2 லிட்டர் வ.எண்= 3 kg | தேவைப்படும் அளவு | தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | PYRETHRUM பைரித்ரம் 2% | 844 | 152 | 996 | 200 லிட்டர் | 199200 |
| 2 | TEMEPHOS டெமிபாஸ் 50% | 550 | 99 | 649 | 150 லிட்டர் | 97350 |
| 3 | DIFLUBENZURON தி்ஃப்ளுபென்சுரான் 25% | 2480 | 446 | 2926 | 230 kg | 672980 |

மொத்தம்= 969530

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2058/2025/எச்1)

9. தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள் 2025– மாநிலத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகிய பகுதிகளில் 01.08.2025 முதல் மாநிலத்தில் நிகழும் பிறப்பு இறப்பு பதிவுகள் சம்மந்தமாக புதிய பிறப்பு இறப்பு பதிவு அறிக்கைகள் மற்றும் பிறப்பு இறப்பு பதிவு பதிவேடுகள் படிவங்கள் அரசு ஆணை எண்,351 நாள்.31.07.2025 (Health and Family Welfare (AB2) Department)–ன்படி கீழ்கண்டவாறு படிவங்களை திருச்சி மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் நிறுவனத்திடம் நேரடியாக கொள்முதல் செய்திட உத்தேச செலவினத் தொகை ரூ.1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆணையரின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

| வ,எண் | படிவங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிறப்பு அறிக்கை படிவம் –1 | 20 புத்தகம் |
| 2 | தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் பிறப்பு அறிக்கை படிவம் 1 A | 2 புத்தகம் |
| 3 | இறப்பு அறிக்கை படிவம் –2 | 50 புத்தகம் |
| 4. | இறந்து பிறந்தவை அறிக்கை படிவம்–3 | 2 புத்தகம் |
| 5, | மருத்துவமனைகளின் ஏற்படும் இறப்பின் காரணத்திற்குரிய மருத்துவ சான்று படிவம்–4 | 10 புத்தகம் |
| 6 | வீடு மற்றும் வெளியிடங்களில் ஏற்படும் இறப்பின் காரணத்திற்குரிய மருத்துவ சான்று படிவம்–4 A | 10 புத்தகம் |

ந.க.எண். 1645/2025/எச்1 நாள். 22.10.2025

<u>அலுவலக குறிப்பு : 1.</u>மன்றம் அனுமதிக்கலாம்,

10. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் வாகனம் TN31 BM7864 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளிகள் பெற்று வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ,1,00,000./- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது,

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்,
2. மேற்படி செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவிடலாம்,
3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்,

(ந.க.எண்.1936/2025/எச்1)

11. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணியாளர்களுக்காக பயன் படுத்தப்பட்டு வரும் TN31 BM 7864 டிப்பர் லாரி பழுது நீக்கம் செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பெறப்பட்ட விலைபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | சரவணா ஆட்டோமொபைல்ஸ்<br>48.T.E.L.E ஷோப்பிங் காம்ப்ளக்ஸ், செம்மண்டலம்,<br>கடலூர் | ரூ.97600/- |
| 1 | ஸ்ரீ லக்ஷ்மி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>காரப்பநாயக்கன் சாவடி,<br>கடலூர். | ரூ. 101150 /- |
| 2 | விநாயகா ஆட்டோ கேரேஜ்<br>ஜெயராம் நகர், சுபலக்ஷ்மி மஹால்,<br>வில்வராயநத்தம், கடலூர். | ரூ. 105500 /- |

அலுவலக குறிப்பு :

1. மேற்காணும் விலைபுள்ளிகளில் வரிசை எண் 1ல் சரவணா ஆட்டோமொபைல்ஸ் 48.T.E.L.E ஷோப்பிங் காம்ப்ளக்ஸ், செம்மண்டலம், கடலூர்,என்ற அங்கீகாரம் நிறுவனத்திற்கு விலைபுள்ளி குறைவாக உள்ளதால், அதனை மன்றம் ஏற்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1936/2025/எச்1 )

12. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொரோனா காலகட்டத்தில் கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான தொகையினை வழங்கவில்லையென R.V. டிரேடர்ஸ் நிறுவன உரிமையாளர் திரு.R.ராம்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மீண்டும் துறந்து வழக்கு எண்.1834/2024 ஆகும் இவ்வழக்கில் நகராட்சி சார்பில் வாதிடுவதற்காக அரசு வழக்கறிஞர் திரு.M.S.பிரேம்குமார் என்பவர் ஆஜராகி உள்ளார். அவருக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.30000/- செலுத்திட மன்றத்தின் முன் அனுமதிக்கு, பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்:438/2020/எச்1)

13. இந்நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் 18.03 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. நகராட்சி பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், பரப்புரையாளர்கள் கொண்டு விலங்குகள் (சமுக நாய்) கணக்கெடுக்கப்பட்டது. மொத்தம் 227 தெருக்களில் 820 சமுக நாய்கள் இருப்பதாக தெரியவருகிறது.இந்நகராட்சியில் கருத்தடை மையம் இல்லாத காரணத்தால் புதிய கருத்தடை மையம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. முதற்கட்டமாக ARV (Anti Rabies Vaccination) பணியினை மேற்கொள்ள கீழ்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுவதால் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ சர்வ், திருச்சி அவர்களிடம் இருந்து உபகரணங்கள் பெற்று கொள்ள தோராய செலவினம் ரூ.80000/- ( எண்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் பெயர் | தேவைப்படும் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நாய்பிடிக்கும் (லைலான்) வலை அலுமினியம் பிடி கொண்டது | 10 |
| 2 | நாய் வாயுரை | 10 |
| 3 | ஒளிரும் பட்டை | 820 |
| 4 | கையுரை திடமானது | 10 |

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 2023/2025/எச்1)

14. இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் புதிதாக வாங்கிட பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன வகை | வாகன எண் |
|---|---|---|
| 1 | TATA ACE | TN31 CS6417 |
| 2 | TATA ACE | TN31 CS6426 |
| 3 | TATA ACE | TN31 CS6494 |
| 4 | TATA ACE | TN31 CS6476 |
| 5 | TATA ACE | TN31 CS6420 |
| 6 | TATA ACE | TN31 CS6451 |
| 7 | TATA ACE | TN31 CS6436 |
| 8 | TATA ACE | TN31 CS6468 |

இவற்றை வாங்கிய நிறுவனமான VST மோட்டார்ஸ் நிறுவனம் மூலமாக சர்வீஸ் செய்து கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் .

(கோப்பு எண்: 1176/2025/எச்1)

15. பண்ணுருட்டி நகராட்சியில் 2021– 25 க்கான வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரத்தை மாலைமலர் நாளிதழில் நாள். நாளிதழில் நாள் 15.07.2025 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு தினமலர் நாளிதழ் நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 36382/– யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

16. பண்ணுருட்டி நகராட்சி தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகள் 2021–25க்கான வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரத்தை தமிழ் முரசு நாளிதழில் நாள் 17.04.2025 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு (Kal Publication (P) LTD) நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 20,000/– யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

(கோ. எண். / 2025 /இ2)

17. பண்ணுரு நகராட்சி தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகள் 2021–25க்கான வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரத்தை தமிழ் முரசு நாளிதழில் (பொங்கல் மலர்) நாள் 13.01.2025 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு (Kal Publication (P) LTD) நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 16,000/– யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். / 2025 /இ1)

18. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.02, விழமங்கலம் பிள்ளையார் கோவில் குளம் அமைந்துள்ள பகுதியில் தெருவிளக்கு, பலன் தரும் மரங்கள் நடுதல், முள்வேலி மற்றும் CCTV CAMERA அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.11.50/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:681 நாள்.30.09.2024ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 11.50 | – 0.34 % சதவிகிதம் குறைவு |
| 2 | S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 11.50 | 2.20% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.34% சதவீதம்** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 2073/இ1/2025)

19. பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்கா மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை புதுப்பித்து புதுப்பொலிவுடன் விளையாட்டு உபகரணங்கள் பழுதுபார்த்தல், மின் விளக்கு அமைத்தல் மற்றும் இதர பணிகளுக்கு மதிப்பீடு ரூ.6.00/- இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:557 நாள்.21.02.2024ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 6.00 | 0.11 % சதவிகிதம் குறைவு |
| 2 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 6.00 | 1.29% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.11% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 14/இ1/2025)

20. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் ஈப்பு வாகனங்கள் நிறுத்துவதற்கு GI SHEET, அலுவலக கட்டிடத்தில் உள்ள அனைத்து மின்விசிறி பழுது மற்றும் புதியதாக மாற்றுதல் மின்விளக்கு LED TUBE LIGHT பொறியியல் பிரிவிற்கு புதிய (2)டன் AC மற்றும் அனைத்து கதவு பழுதுபார்த்தல் மற்றும் கழிவறை பழுதுபார்த்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.7.00/- இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:655 நாள்.30.09.2024ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 7.00 | - 0.08 % சதவிகிதம் குறைவு |
| 2 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 7.00 | 0.28% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M.PARTHIBAN, NO.239/2,GANDHI ROAD, PANRUTI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட -0.08% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 2072/இ1/2025)

21. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 லட்சுமிபதி நகர் சர்வே எண்.49, T.S. No.149 புதிதாக அறிவு சார் மையம் அமைக்கப்பட்டுள்ள வளாகத்தில் முன்புறம் கருங்கல்லால் ஆன தரை நிறுவுதல், வெளிமுகப்புகலை வேலை மற்றும் பெயர் பலகை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.90/- இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:896 நாள்.25.09.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 9.90 | - 0.01 % சதவிகிதம் குறைவு |
| 2 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 9.90 | 4.72% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட -0.01% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.1325/இ1/2025)

22. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 லட்சுமிபதி நகர் சர்வே எண்.49, T.S. No.149 புதிதாக அறிவு சார் மையம் அமைக்கப்பட்டுள்ள வளாகத்தில் வெளிப்புறம் பேவர் பிளாக் அமைத்தல், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அமர்வதற்கான நாற்காலி அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.5.50/- இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:897 நாள்.25.09.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 5.50 | - 0.03 % சதவிகிதம் குறைவு |
| 2 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 5.50 | 0.03% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட -0.03% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.1325-2/இ1/2025)

23. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட V.ஆண்டிக்குப்பம் உருது துவக்கப்பள்ளி, விழமங்கலம் துவக்கப்பள்ளி, தர்காவண்டிமேடு உருது துவக்கப்பள்ளி, திருவதிகை துவக்கப்பள்ளி, T.ராசாபாளையம் துவக்கப்பள்ளி, L.R.பாளையம் துவக்கப்பள்ளி, A.ஆண்டிக்குப்பம் துவக்கப்பள்ளி, ஆகிய நகராட்சி பள்ளிகளில் Smart Tv அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.38.50/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:837 நாள்.30.06.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 26.09.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | TREASURE ENVISION NO.121/B1,P.NO.49 MUDAKATHTHAN,ANAIYUR,MADURAI | 38.50 | – 0.17 % சதவிகிதம் குறைவு |
| 2 | DEEPATHY WRITOOLS CORP, NO.205/35,BAGAVATHSINGH STREET,KAMARAJAR SALAI EXT, SAMANATHAM,MADURAI | 38.50 | 0.02% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **TREASURE ENVISION NO.121/B1,P.NO.49 MUDAKATHTHAN,ANAIYUR,MADURAI** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட–0.17% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 1537/இ1/2025)

24. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பஞ்சவர்ணம் நகர் நடுநிலைப்பள்ளி, மேலப்பாலையம் நடுநிலைப்பள்ளி, சீராங்குப்பம் நடுநிலைப்பள்ளி, மற்றும் TNPP மேல்நிலை பள்ளி ஆகிய நகராட்சி பள்ளிகளில் Smart Tv அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.38.50/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்:836 நாள்.30.06.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 26.09.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | TREASURE ENVISION NO.121/B1,P.NO.49 MUDAKATHTHAN,ANAIYUR,MADURAI | 38.50 | – 0.17 % சதவிகிதம் குறைவு |
| 2 | DEEPATHY WRITOOLS CORP, NO.205/35,BAGAVATHSINGH STREET,KAMARAJAR SALAI EXT, SAMANATHAM,MADURAI | 38.50 | 0.02% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **TREASURE ENVISION NO.121/B1,P.NO.49 MUDAKATHTHAN,ANAIYUR,MADURAI** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட–0.17% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 1539/இ1/2025)

25. பண்ணுரு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள பொது மக்களுக்கு நேரடி நீர் உந்துக்கள் மற்றும் பல்வேறு கொள்ளளவுள்ள 18 எண்ணிக்கைகள் கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி (Tank Oprater) பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நியமிக்கப்பட்ட தினசரி விலை விகிதத்தின் படி குடிநீர் விநியோகம் செய்ய அக்டோபர் 2025 முதல் ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூபாய் தொகை ரூ.39.40/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.395/2025/இ1)

26. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கு மனித சக்தி வழங்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.39.40/- இலட்சத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.27.09.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 07.11.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1 | RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI | 39.40 | - 0.04 % சதவிகிதம் குறைவு |
| 2 | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | 39.40 | 0.19% சதவிகிதம் அதிகம் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட -0.04% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.395/இ1/2025)

27. பண்ணுருட்டி நகராட்சி - வருவாய் நிதி 2025-26ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் தார் சாலை, சிமெண்ட் சாலை, மற்றும் பேவர் பிளாக் சாலை, பகுதிகளில் உள்ள சிறு சிறு பள்ளங்களை (Patches/Potholes) சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.8.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.2332/2025/இ1)

28. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் தார் சாலை, சிமெண்ட் சாலை, மற்றும் பேவர் பிளாக் சாலை, பகுதிகளில் உள்ள சிறு சிறு பள்ளங்களை (Patches /Potholes) சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.8.00/- இலட்சத்திற்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.27.10.2025ல் அனுமதி வழங்கியதற்கிணங்க 25.11.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1. | TECO LED, GROUND FLOOR, A BLOCK NO.4, 1ST STREET, LAKSHMI NAGAR, GERUGAMBAKKAM,CHENNAI | 8.00 | -0.17 % சதவிகிதம் குறைவு |
| 2. | SHREE INFRA TECHNOLOGIES, 4, MM OASIS BLOCK, FIRST FLOOR, LAKSHMI NAGAR 1ST STREET, GERUGAMBAKKAM, CHENNAI | 8.00 | 0.29% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:-

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் TECO LED, GROUND FLOOR, A BLOCK NO.4, 1ST STREET, LAKSHMI NAGAR, GERUGAMBAKKAM,CHENNAI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட -0.17% சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.2332/இ1/2025)

29. பேரிடர் மேலாண்மை - பண்ணுருட்டி நகராட்சி வடகிழக்கு பருவமழை 2025-26 வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக JCB இயந்திரம், டீசல் இஞ்சின், ஜெனரேட்டர், மணல் மூட்டை, கைவிளக்கு, கேஸ்லைட் மற்றும் இதர உபகரணங்கள் வாடகை அடிப்படையில் எடுத்து ஐந்து தினங்களுக்கு (21.10.2025 முதல் 25.10.2025 வரை) பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு - 57(7)இன் கீழ் தொடர்ந்து முடிக்க உள்ளூர் விலை புள்ளிக்கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம் வருமாறு.

| SL.No | விலைப்புள்ளித்தாரர் | தொகை(முகாம் ஒன்றிற்கு) |
|---|---|---|
| 1. | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | **464080.00** |
| 2. | T.SESHADIRI CONTRACTOR, NO.7/4,STATE BANK COLONY, THIRUPAPULIYUR,CUDDALORE | **474750.00** |
| 3. | RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI | **475860.00** |

மேற்படி, மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும் மேற்படி தங்களது குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022, பிரிவு - 57(7) கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு:-

1. இப்பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு. M. பார்த்திபன் என்ற ஒப்பந்ததாருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் நகராட்சிகளின் சட்ட விதிகள் 2022, பிரிவு - 57(7) ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.1525/2025/இ1)

30. தூய்மை பணியாளர்களின் உணவு திட்டம் 2025–26ன் நிதியின் கீழ் தூய்மை பணியாளர்களுக்கு தினந்தோறும் ஒரு வேலை உணவு வழங்குதல் பணிக்கு அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடித ந.க.எண்.6734/மாந1/2025– 2, நாள். 05.11.2025 அனுமதி வழங்கியதற்கினங்க, அரசாணை (4ப) எண். 56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை நாள் 21.11.2025ல் (மூன்று ஆண்டு ஒப்பந்த அடிப்படையில்) ஆணை பிறப்பித்ததை தொடர்ந்து மதிப்பீடு தொகை. ரூ.151.23/– இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 21.11.2025ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 26.11.2025 அன்று விலைப்புள்ளி திரக்கப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | மூன்று ஆண்டுகான ஒப்பந்த தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|---|
| 1. | M/s. KRISHNASAMY MURUGAN, (ARULJOTHI VALLALAR UNAVAGAM) 12, NEAR LEO MARAVADI, LINK ROAD, KRISHNA PRINTERS, | 151.23 | 144.42 | 0.28% சதவிகிதம் குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.**Krishnasamy Murugan, (Aruljothi Vallalar Unavagam)** 12, NEAR LEO MARAVADI, LINK ROAD, KRISHNA PRINTERS, PANRUTI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, **மதிப்பீட்டை விட 0.28 % சதவீதம் குறைவாக** கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்.2244/இ1/2025)

31. இந்நகராட்சியில் பொதுபிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவு வருவாய் பிரிவில் தேவைப்படும் உயர்அலுவலர்களிடம் இருந்து பெறப்படும் தேவையான விவரஙகளை இணையதளம் (Google Sheet) மற்றும் மின்அஞ்சல் மூலமாக உரிய தகவல்களை உடனுக்குடன் அனுப்பவேண்டிய நிலை உள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியில் இரண்டு தட்டச்சர் பணியிடம் கடந்த 8 ஆண்டுகளுக்கு மேல் காலியாக இருந்து வருகிறது. இதனால் உயர்அலுவலர்களுக்கு உரிய பதில்கள் பூர்த்தி செய்து அனுப்ப காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. எனவே இக்காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டும், மேலும் நிலுவையில் உள்ள தணிக்கை தடை பத்திகளை இணையதளத்தில் (CAMS Portal) பதிவேற்றம் செய்து நிலுவையில் உள்ள தணிக்கை பத்திகளுக்கு உரிய பதில்களை தயார் செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் மாவட்ட அளவிலான உயர்மட்ட குழு கூட்டத்தில் மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணிகளை செய்ய உரிய தட்டச்சர் பணியிடம் இந்நகராட்சியில் காலியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வெளிக்கொணர்வு குழுமூலம் இரண்டு தட்டச்சர்களையும் மேலும் 2021–2022 முதல் 2024–2025 வரை பஙகளிப்பு ஒய்வூதிய திட்டம் ஆகியவைகளையும் (IFHRMS) இணையதளத்தின் மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவேண்டியுள்ளது. இதற்கு தேவையான கணினியில் பயிற்சி பெற்ற இரண்டு நபர்களை வைத்து பணியினை முடித்து தணிக்கைக்கு சமர்பிக்கப்பட வேண்டியுள்ளது . இந்நிலையில் மேற்கண்ட பணிகளை முடிக்க நகராட்சி நிர்வாக நலன் கருதி 4 பணியாளர்களை நியமனம் செய்து இப்பணியினை முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் உத்தேச செலவினம் மேற்கொள்வதற்கு ரூ. 5.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்

கோ. எண்.2377/2025/சி1

32. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்த பணிகள் செய்யும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொது சுகாதாரப்பிரிவில் பொருட்கள் சப்ளை செய்யும் விற்பனையாளர்களிடமிருந்து ஒப்பந்த பட்டியலில் பிடித்தம் செய்யும் மாநில சேவை வரி (SGST) மத்திய மாநில சேவை வரி (CGST) தொகையினை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களின் கணக்கில் செலுத்தி ஈடுசெய்யும் பணியினை மாநில பட்டய கணக்கர் (Auditor) மூலம் உரிய அரசு தலைப்பில் செலுத்தும் பணியினை 2024–2025 –ம் ஆண்டிற்க்கு சேவை வரி கணக்கினை தாக்கல் செய்த வகையில் ரூ.1,46,000/– வழங்கக் கோரி சமர்ப்பித்துள்ள பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சேவை வரித் தொகையினை உரிய நாட்களில் அரசு தலைப்பில் செலுத்தி தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் திரு.எல்.முத்துக்குமரன் பட்டய கணக்கர் மூலம் பணியினை செய்து முடித்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

இடம் – பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 29.11.2025

நகரமன்ற தலைவர்
பண்ணுருட்டி நகராட்சி